செ.வெ.எண்: 14/மார்ச் நாள்: 07.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## அச்சிடுபவர் மற்றும் வெளியிடுபவர் குறித்த பெயர் மற்றும் முகவரி விபரங்கள் பிரசுரத்தில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும்.

## அச்சக உரிமையாளர்கள் உடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (07.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள காலங்களில் துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் அச்சிடும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள காலங்களில் அச்சக உரிமையாளர்கள் சுவரொட்டிகள் / துண்டு பிரசுரங்கள் அச்சிடும் போது இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 127-ஏ -இன்படி விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமாகும். அச்சிடுபவர் மற்றும் வெளியிடுபவர் குறித்த பெயர் மற்றும் முகவரி விபரங்கள் பிரசுரத்தில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும். பிரசுரம் செய்ய விரும்புபவர்கள் உறுதிமொழி படிவத்தை (Appendix -A) பூர்த்தி செய்து அச்சக உரிமையாளர்களிடம் வழங்கிட வேண்டும். அச்சக உரிமையாளர்கள் பிரசுரங்கள் அச்சிடப்பட்ட பிறகு உறுதிமொழி மற்றும் ஆவணங்களை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்திட வேண்டும்.

மேலும் வேட்பாளரின் பெயரில் பிரசுரம் அச்சடிக்க வேறொரு நபர் அணுகும் போதும் சம்பந்தப்பட்ட வேட்பாளரின் சம்மதம் பெற்ற பின்னரே அச்சிட வேண்டும். பிரசுரங்களை வேட்பாளரின் சம்மதமின்றி அச்சிட்டாலோ அல்லது அச்சிடுபவர் / வெளியிடுபவர் ஆகியோரின் விபரங்கள் இன்றி அச்சிட்டாலோ இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.மு.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள், மாவட்டத்திலுள்ள அச்சகங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**